செ.வெ.எண்: 24 நாள்: 15.12.2016

**புதுக்கோட்டையை சேர்ந்த மாணவி தேசிய அளவிலான தடகளப் போட்டியில் விளையாட தகுதி பெற்றுள்ளார் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் தடகளப்போட்டியில் மாநிலத்தில் முதலிடம் பெற்ற மாணவியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (15.12.2016) நேரில் அழைத்து பாராட்டி வாழ்த்து தெரிவித்து கூறியதாவது:

மாநில அளவிலான குடியரசு தின தடகளப்போட்டிகள் விருதுநகர் மாவட்டம், கலசலிங்கம் பல்கலைக்கழகத்தில் 04.12.2016 முதல் 05.12.2016 வரை நடைபெற்றது. இப்போட்டியில் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர். இதில் நமது மாவட்டத்திலிருந்து சென்ற திருவப்பூர் நகராட்சி உயர்நிலைப்பள்ளியில் 9ம் வகுப்பு பயிலும் மாணவி கே.வனிதா கலந்து கொண்டு 3000 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார். இதேபோன்று வயலோகம் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவி எம்.சங்கீதா 800 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் மாநில அளவில் இரண்டாம் இடம் பெற்றுள்ளார். மேலும் ஓட்டப்பந்தயத்தில் முதலிடம் பெற்ற மாணவி கே.வனிதா அகில இந்திய அளவில் தெலுங்கானா மாநிலத்தில் நடைபெறும் போட்டியில் கலந்து கொள்ள தேர்வு செய்யப்பட்டுள்ளார். எனவே இம்மாணவி தேசிய அளவிலான போட்டியில் முதலிடம் பிடித்து வெற்றி பெற்று நமது மாநிலத்திற்கும், நமது மாவட்டத்திற்கும் பெருமை சேர்க்க வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு.வாஞ்சிநாதன், தலைமையாசிரியர் திரு.மணவாளன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**